**இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை – 2013**

இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 18 ஆம் இலக்க இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 1,455,000 கிரயமான அதிகாரசபைக்குச் சொந்தமான ஜீப் வண்டி மீள் கணிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிராததுடன் இந்த மோட்டார் வாகனம் வெளித்தரப்பினர்களின் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கலகாவ தேயிலை ஆலைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களை அகற்றப்பட்டமையினால் பெறப்பட்ட ரூபா 275,000 தொகையான இலாபம் மற்றும் ஏனைய சொத்துக்களை அகற்றப்பட்டமையால் ஏற்பட்ட ரூபா 7,632,383 தொகையான நட்டம் என்பவற்றை நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிப்பதற்குப் பதிலாக தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

கடந்த பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்படுகின்ற பல்வேறு நபர்களிடமிருந்தும் 16 நிறுவனங்களிலிருந்தும் பெறவேண்டிய ரூபா 1,456,170 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருட காலமாக பல்வேறு காரணங்களினால் அறவிட முடியாது காணப்பட்ட ரூபா 2,135,397 நிலுவை முற்பணத் தொகையினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு (COPE) சிபார்சு செய்திருந்த போதிலும் அதற்காக பொதுத் திறைசேரியின் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினதும் பொது முயற்சிகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 194,437 தொகை முறையான அங்கீகாரமின்றி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,479,479 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 24,710,363 ஆனமையால் நிதி விளைவுகள் ரூபா 7,230,884 இனால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டின் போதும் மீண்டெழும் மானியம் ரூபா 7,670,000 இனால் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று ஊழியர்களினாலும் இரண்டு நிறுவனங்களினாலும் பல்வேறு காரணங்களால் ரூபா 171 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி 4 வழக்குகளும், நட்டஈட்டுத்தொகை குறிப்பிடப்படாத 4 வழக்குகளும் சேர்ந்து 08 வழக்குகள் அதிகாரசபைக்கு எதிராக நீதிமன்றங்களில் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரசபையினால் அலுவலக கணனியொன்று காணாமல் போனமை மற்றும் மோசடியாக உடன்படிக்கையை மாற்றியமை போன்ற விடயங்களின் கீழ் நட்டஈட்டுத் தொகை குறிப்பிடப்படாத இரண்டு வழக்குகள் வெளிநபர்களுக்கு எதிராக நீதி மன்றங்களில் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அதிகாரசபையின் அதிகாரப் பிரதேசத்தில் 15,000 வீட்டுக் குடும்ப அலகுகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொதுத் திறைசேரியிலிருந்து ரூபா 50 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபைக்கு ரூபா 10.72 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்ததுடன் ஒட்டுமொத்தச் செலவினம் ரூபா 14.37 மில்லியனாக இருந்தது. நிதியேற்பாடு தாமதமாகியமையும், அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 3.65 மில்லியன் தொகை

அட்டுறுவாகியமையினாலும் இலக்கிடப்பட்ட நிதி முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான கொள்கைத் திட்டமும் நியமங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு 07 பிரிவுகளில் அந்த நிகழ்ச்சித்திட்டம் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 07 பிரிவுகளின் கீழான பதவியணியினர் மற்றும் நான்கு மாவட்ட அலவலகங்களின் பதவியணியினரையும் உள்ளடக்கிய சகல பதவியணியினருக்குமான சம்பளங்கள், பிரயாணச் செலவுகள், மேலதிக நேரம் மற்றும் எரிபொருள்களுக்காக மாத்திரம் அதிகாரசபை ரூபா 114,864,346 செலுத்தியிருந்ததுடன் கணக்காய்வின் போது பரீட்சிக்கப்பட்ட பிரிவுகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) தோட்ட மற்றும் கல்விப் பிரிவு – தோட்ட அபிவிருத்தி

- காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் வெற்றிலைப் பயிர்ச் செய்கை, இளநீர் பயிர்ச்செய்கை, தேயிலைப் பயிர்ச் செய்கை, கித்துள் உற்பத்தியை அபிவிருத்திசெய்தல், மிளகாய்ப் பயிர்ச் செய்கை, பாக்குப் பயிர்ச் செய்கை மற்றும் கறுவாப் பயிர்ச்செய்கை போன்ற செயற்திட்டங்களுக்காக 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 5,890,500 தொகையான நிதியேற்பாட்டில் மீளாய்வாண்டின் போது ரூபா 801,363 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் செலவினத்தின் 13 சதவீதமான சிறிய பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் நிறைவேற்றப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

- 2013 ஆம் ஆண்டின் போது மொனராகலை மாவட்டத்தில் 5,100 செவ்விளநீர் கன்றுகளை பகிர்ந்தளித்தல், மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 201 ஏக்கர்களில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மொனராகலை மாவட்டத்தில் 37,800 பாக்கு கன்றுகளை பயிரிடும் இலக்கில் 9,850 கன்றுகள் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தன.

(ii) விவசாய மற்றும் மிருகவளப் பிரிவு – விவசாய அபிவிருத்தி

வணிக மட்டத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி, உணவு தன்னிறைவு நிகழ்ச்சித்திட்டம், விதை மற்றும் கன்றுகளைத் தயாரிக்கும் பிரிவினை வலுப்படுத்துதல் மற்றும் அதிகாரமூட்டல்,

காணப்படுகின்ற பாதுகாப்பான நாற்றுமேடைகளை வலுப்படுத்துல் மற்றும் அதிகாரமூட்டல் போன்ற செயற்பாடுகளுக்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 5,447,000 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது அத்தொகையில் ரூபா 3,107,142 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்ததுடன் அது ஒதுக்கப்பட்ட தொகையில் 57 சதவீதமாகும். அதன் பிரகாரம், விவசாய அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்ட படி செயல்முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை.

(iii) மிருகவள மற்றும் கடற்தொழில் பிரிவு – மிருக வள மற்றும் கடற்தொழில் அபிவிருத்தி

மீளாய்வாண்டின் போது காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் மிருகவள மற்றும் கடற்றொழில் அபிவிருத்திக்காக நான்கு செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 5,747,500 தொகையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான அதிகாரசபையின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செலவினம் ரூபா 1,636,525 ஆக மாத்திரம் இருந்ததுடன் செலவினத்தின் 28 சதவீதமாக இருந்தது. நடைமுறையிலுள்ள சிரமங்கள், பிரச்சினைகள் மற்றும் நிதி ஏற்பாடுகள் கிடைக்காமையின் அடிப்படையில் இலக்கிடப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்த முடியாதிருந்ததாக அதிகாரசபையினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(iv) விற்பனை மற்றும் சேவை அபிவிருத்தி

விற்பனை மற்றும் சேவை அபிவிருத்தியின் கீழ் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் 35 நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 6,140,000 தொகையில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு செலவிடப்பட்ட தொகை ரூபா 715,128 மாத்திரமாகும். அந்தச் செலவினங்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டின் படி உள்ளகப் பதவியணியினரின் பயிற்சிகளுக்காக ரூபா 532,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த பயிற்சியினால் உரிய செயற்திட்டத்திற்கு பங்களிப்புக் கிடைத்திருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது மாத்தறை மாவட்டத்தின் மேலதிக உற்பத்திகளை விற்பனை செய்யும் நான்கு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ரூபா 4,017,550 தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது செயற்திட்டத்திற்காக எத்தொகையும் செலவிடப்படாதிருந்ததுடன் நிதி மற்றும் பௌதீக செயல்முன்னேற்றத்தின் இலக்குகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிரலகெலே செயற்திட்டத்தின் கீழ் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முறையான வகையில் பங்களிப்புப்பணம் அந்த நிதியத்திற்கு அனுப்பப்படாமையினால் மீளாய்வாண்டின் போது மிகைக் கட்டணமாக ரூபா 148,348 தொகை அந்த நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 49,923 தொகை மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 முறையான வகையில் கையேற்கப்படாத காணிகளில் / சொத்துக்களில் செயற்திட்டத்தை ஆரம்பித்தல்**

அரசாங்கத்திற்குரிய மாத்தறை, வல்கமவில் அமைந்துள்ள அதிகாரசபையின் பிரதான அலுவலகங்கள் அமைந்துள்ள 02 றூட், 17 பேர்ச் காணி அதிகாரசபைக்குரித்தற்ற போதிலும், அதிகாரசபையினால் ரூபா 110,434,073 தொகை செலவிடப்பட்டு பிரதான அலுவலகக் கட்டிடம் அந்தக் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணியின் உரித்து அதிகாரசபைக்குக் கிடைத்திருக்கவில்லை.

**4.4 வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 1,455,000 தொகையான ஒரு வாகனம் முதலீட்டு மேம்படுத்துகை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் கீழ் கடமைகளுக்காக வழங்கப்பட்டிருந்த இந்த வாகனம் மீளாய்வாண்டில் அமைச்சு மாற்றமடையும் போது மீளக் கையளிக்க

வேண்டிய போதிலும், 2014 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் மீளக் கையளிக்கப்பட்டிராததுடன் மேற்கூறப்பட்ட அமைச்சில் சேவையில் இருந்த காலப்பகுதிக்காக சாரதிக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 25,466 தொகையான சம்பளமும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 287 ஆகவும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 259 ஆகவும் இருந்ததுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 28 ஆக இருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தை நீக்குதல்**

1996 இன் 18 ஆம் இலக்க இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அதிகாரசபை 2014 சனவரி 03 ஆந் திகதிய 1843/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் நீக்கப்பட்டிருந்ததுடன் 2014 சனவரி 03 ஆந் திகதி தொடக்கம் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் அதிகாரத்துடன் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றது.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 ஆம் ஆண்டில் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் திருத்தத்தினால் பிரதேசத்தின் தேவையின் அடிப்படையிலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரமும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.3 கொள்வனவுத் திட்டம்**

2013 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டதற்கு இணங்க மீளமைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கணக்காய்வுக் குழு

அதிகாரசபையின் கூட்டமைப்பு திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையினால் 2013 ஆம் ஆண்டின் யூலை மாதம் 01 ஆந் திகதி கூட்டப்பட்ட தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தது.

(அ) அதிகாரசபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சொத்துக்கள் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கையளிக்கும் போது அந்தச் சொத்துக்களைக் கைவிடுவதைத் தடுப்பதற்காக அச் சொத்துக்களை குறிப்பிட்ட பிரகாரம் உரிய திணைக்களத்திற்கு கையளிப்பதற்காக அதிகாரசபைக்குச் சொந்தமான சகல காணிகள் தொடர்பாகவும் பதிவேடொன்றைத் தயாரித்தல்.

(ஆ) அதிகாரசபைக்குக் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கையளிக்க முடியாத காணிகள் தொடர்பான பதிவேடொன்று பிரதிப் பணிப்பாளரினால் (முதலீட்டு மேம்படுத்துகையும் காணியும்) தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்தல்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காணி தொடர்பாக நில அளவைத் திணைக்களத்தின் அளவிடைத் திட்டம் தயாரிக்கப்பட்டு கையளிப்பதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் விபரம், உறுதி மற்றும் கையளித்தல் கடிதம், மதிப்பீட்டுப் பெறுமதி போன்ற விபரங்களைக் காட்டும் பதிவேடு தயாரிக்கப்பட்டிராததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடு கணனியில் குறிப்பிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii) அதிகாரசபையினால் நீண்ட கால குத்தகையின் கீழ் குத்தகைக்குப் பெற்ற நபர்களுடன் 5 காணிகள் மற்றும் 03 கட்டிடங்கள் தொடர்பாக கையொப்பமிடப்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கை திவிநெகும திணைக்களத்திற்கு கையளிக்கும் போது அந்த உடன்படிக்கை திருத்தப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) காணிகளைக் கையேற்றல் அதிகாரச்சட்டத்தின் 38(அ) பிரிவின் கீழ் கைப்பற்றப்பட்ட 1148 ஏக்கர் அளவிலான ஆறு காணிகளின் வைப்புக்கள் மீள அதிகாரசபைக்குக் கையளிக்கப்பட்டு காணி கைப்பற்றல்கள் கைவிடப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்ததுடன்

அந்தக் காணிகளை மீளக் கையளித்தல் தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை.

(iv) அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் அதிகாரத்தின் பிரகாரமும் 1997 யூன் 17 ஆந் திகதிய 980/22 ஆம் இலக்க வர்த்தமானியில் மாத்தறை மாவட்டத்தில் 90 ஏக்கர் அளவிலான நான்கு காணிகளை கையளிப்பதற்கு பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த போதும் அந்தக் காணி கையளித்தல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அந்தக் காணி கையளிக்கப்படாதிருந்ததுடன் கையேற்பதற்கு வழங்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.5 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தம்மெத்தாவ குளக்கட்டிற்கு கிரவல் மண் 4336 கனமீற்றர் போடுவதற்கான ரூபா 2,065,706 தொகை கொடுப்பனவு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திஸ்ஸமஹாராம நீர்ப்பாசனப் பொறியியலாளரின் 2014 சனவரி 22 ஆந் திகதிய அறிக்கையின் பிரகாரம் குளக்கட்டின் நான்கு இடங்களிலிருந்து பெறப்பட்ட மண் மாதிரிகளின் பிரகாரம் சேர்க்கப்பட்ட மண்ணின் அளவு 3114 கனமீற்றராக இருந்தமையும், நீரினால் மூழ்கியிருந்த பகுதியின் மண் அளவினைக் கணிப்பீடு செய்ய முடியாதிருந்தமையும், மொத்த மண்ணின் அளவு 4203.9 கனமீற்றராக இருந்தமையும் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் சரியான மண் அளவினை அந்த அறிக்கையினாலும் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) குளக்கட்டிற்காக ஈடுபடுத்தப்பட்ட மண் அளவினைக் கணிப்பீடு செய்யும் போது அணையின் நீளம், அகலம் என்பன கவனத்திற் கொள்ளப்படாதிருந்ததுடன் அளவிடைப் பத்திரங்களின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்ட மண் மூட்டையின் அளவின் அடிப்படையில் மண்ணின் இயலளவு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் கொடுப்பனவு செய்யப்பட்ட மண்ணின் அளவு குளத்தின் அணைக்கட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(iii) இது தொடர்பாக 2013 திசெம்பர் 19 ஆந் திகதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களின் விளக்கமளிப்பை விசாரித்தமை தவிர இது தொடர்பாக மேலதிக பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றாமை

இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பாக 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் போது இந்த நிறுவனத்தின் நோக்கத்தை எதிர்காலத்தில் மாற்றுவதற்கு (திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம்) இருந்தமையினால் அத்திகதியில் உள்ளவாறு கலந்துரையாடுவதற்கிருந்த 17 விடயங்களுக்காக இது வரையிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேலும் எடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் செயலாளரினால் 7 பேர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டு சிபார்சுகளை உள்ளடக்கிய அறிக்கை 2013 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற செயற்குழுவின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்த 17 விடயங்களில் கீழே காண்பிக்கப்படுகின்ற 07 விடயங்கள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(i) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை இலக்கம் 6 இன் மூலம் அவுஸ்திரேலிய கம்பனியின் உடன்படிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய ரூபா 36.4 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு பொறுப்புவாய்ந்த ஒருவருக்கு எதிராக இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபை எடுக்கின்ற சட்டரீதியான நடவடிக்கைகளின் பிரகாரம் அறவிட வேண்டிய அரசின் பங்கு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை இலக்கம் 8 இன் மூலம் எவ்வித பிரதிபலனும் இல்லாத தனியார் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 43.888 மில்லியன் தொகையை மீள அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்

பிரகாரம், அமைச்சின் தீர்மானத்தின் அடிப்படையில் கம்பனி கலைக்கப்பட்டு, அந்தக் கம்பனிக்குச் சொந்தமாக இருந்த இரண்டு வாகனங்கள், காணியும் கட்டிடமும் அரசாங்கத்தின் பொது மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 14,900,000 தொகையில் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அதிகாரசபை ஈடுபடுத்திய ரூபா 10,000,000 தொகையான ஆரம்ப மூலதனம் மற்றும் ரூபா 18,172,520 தொகையுடன் ரூபா 28,172,520 கூட்டுத்தொகையான பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை இலக்கம் 8 இன் மூலம் கிரலகெலே செயற்திட்டத்திற்கான உரித்து பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 7,113,104 தொகையான செலவினங்களைச் செய்தல் தொடர்பாக செயற்பட்ட சகல நபர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் செயற்பாடுகளைக் கையளித்த இலங்கை சுற்றுலா அதிகாரசபை எவ்வித நடவடிக்கையையும் ஆரம்பித்திருக்கவில்லை.

(iv) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை இலக்கம் 9 இன் மூலம் காணிகளை கைப்பற்றுவதற்காக பல்வேறு பிரதேச செயலகங்களிலும் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 13,607,115 தொகை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,947,127 தொகை நிலுவையாக இருந்தது.

(v) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை இலக்கம் 13 இன் மூலம் நில்வல கங்கை இரும்பு மிதவை தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுத்து குழுவிற்கு அறிக்கையிடுமாறு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், இரும்பு மிதவை தொடர்பாக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திட்ட நிறுவனம் அதிகாரசபைக்கு எதிராக ரூபா 158 மில்லியன் நட்டஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

(vi) சேவையிலிருந்து அகற்றப்பட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் வாகனத்திற்குச் செலவிடப்பட்ட ரூபா 450,725 தொகையினை அந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுமாறு பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை இலக்கம் 14 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(vii) பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கட்டளை இலக்கம் 15 இன் பிரகாரம் காலி, அக்மீமன, கந்துறுதுவவத்தவில் 19 ஏக்கர் 02 றூட் 14 பேர்ச் கையேற்கப்பட்டு ரூபா 10,539,989 தொகை செலவிடப்பட்டிருந்தும் திட்டமிடப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்தாமையின் காரணமாக செலவினம் பயன்பாடற்றமையினால் உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான படிமுறைகளை எடுப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. இந்தக் காணி கையேற்பதிலுள்ள தாமதத்தினால் ரூபா 6,675,994 தொகையான வட்டி செலுத்த வேண்டியேற்பட்டமை, 1997 ஆம் ஆண்டில் ரூபா 3,000,000 தொகையான மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் 2006 ஆம் ஆண்டில் ரூபா 10,539,989 தொகையான கொடுப்பனவு, உரித்தாளிகளை இனங்காணல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2012 திசெம்பர் 07 ஆந் திகதிய கடிதத்தில் சனாதிபதியினால் காலி மாவட்டத்தின் ஒரு பாடசாலைக்கு இந்தக் காணி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் எவ்வித அபிவிருத்திச் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) திட்டங்களைத் தயாரித்தல்
(இ) பதிவேடுகளைப் பேணல்
(ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு